சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 216/2019

C/w

**மனு எண். எம்.சி.ஓ.பி. 182/2019**

PW - 3

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | குருசாமி |
| த.பெ. | கோட்டைய நாடார் |
| வயது | 61 |
| முகவரி | பாண்டியாபுரம், திருநெல்வேலி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| மசாஆ - 20 | கோயமுத்தூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட புத்தகம். |
| மசாஆ - 21 | எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

| | |
|---|---|
| மசாஆ - 22 | எனது பான் கார்டு நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) |
| மசாஆ - 23 | எனது வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது), |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு விபத்தின் காரணமாக எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும், ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சரக்கு வாகனத்தில் பின்புறம் 9 பேரோடு விபத்து சமயத்தில் சென்றோம் என்று சொன்னால் மொத்தம் 8 நபர்கள் சென்றோம், பின்புறம் 4 நபர்கள் சென்றோம். சரக்கு வாகனத்தில் பேசிக்கொண்டே சென்றதால் விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்ற வாகனத்தின் மீது கார் மோதிவிட்டது. விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு தான் எனக்கு தெரிந்தது என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அவருடைய வாகனத்தை சரியாக ஓட்டி வந்தார் என்றும் நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. நான் உட்கார்ந்து சென்ற வாகனத்திற்கு தகுதி சான்றுஇல்லை என்றும் மேலும் சரக்கு வாகனத்தில் சுமார் 8 நபர்களுக்கு மேல் சென்ற காரணத்தினாலும் மோட்டார் வாகன விதி மீறல் ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் நாங்கள் அமர்ந்து சென்ற வாகனத்தின் உரிமையாளரின் காப்பிட்டாளரை ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் அதிவேகமாக சென்று விபத்தை ஏற்படுத்தியதால் 2ம் எதிர்மனுதாரருக்கு

எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் போலியாக உற்பத்தி செய்யப்படவை என்று சொன்னால் அது சரியல்ல. நான் ஒவ்வொரு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி